16.10.2025

CC.541/2022

PW-1,செல்வி க/பெ.ராஜ்குமார்

(1, 2 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் இடைநிலை ஆசிரியராக இருந்து வருகிறேன். எனக்கும் 1ம் எதிரிக்கும் 1998ல் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடக்கும் போதும் நான் ஆசிரியராக இருந்தேன். அப்போது எங்கு நான் ஆசிரியராக இருந்தேன் என்றால் மாவிலிபட்டியில் ஆசிரியராக இருந்தேன். நானும் எனது கணவரும் தனிக்குடுத்தனமாக கீழஉரப்பனூர் நடுத்தெருவில் குடியிருந்து வந்தோம். தீபா மற்றும் சுபா ஆகிய எதிரிகளுக்கு திருமணம் அப்போது முடிந்துவிட்டதா என்றால் மூத்த மகள் சுபா திருமணமாகி விவாகரத்து பெற்று வீட்டில் இருந்தார். மற்றொருவர் திருமணம் ஆகாமல் வீட்டில் இருந்தார். எனது பெரிய மகன் என்னுடனும் சின்ன மகன் எனது கணவருடன் உள்ளாரா என்றால் என்னுடன் தான் இருந்தார். இரு பையன்களுக்கும் பள்ளிச் செலவு மற்றும் இதர செலவுகளை 1ம் எதிரி பார்த்து வருகிறார் என்றால் இல்லை. நான் தான் பார்த்து வருகிறேன். அவ்வப்போது 1ம் எதிரி 2வது மகனை பார்த்து பராமரித்து வருவார். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் மாவிலிப்பட்டியில் இருக்கும் போது பள்ளிக்குழந்தைகளுக்கு தொந்தரவு கொடுத்ததற்காக தற்காலிகமாக பணி நீக்கம் செய்யபட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நான் தாமதமாக வந்ததால் தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் திருமணமான தினத்தில் இருந்தே மாமியார் மற்றும் எனது கணவரின் சகோதரிகள் அவர்களின் தூண்டுதலின் பேரில் தான் என்னை வாழவிடாமல் செய்தார்கள் என்று சொல்லியிருப்பது உண்மையில்லை என்றால் சரியல்ல. விவாகரத்து வழக்கு எனது கணவரால் தாக்கல்

செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியும். இந்த வழக்கிற்கான புகார் கொடுக்கும்போதே எங்களுக்குள் விவாகரத்து ஆகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. 2013வது வருடமே விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2015ம் வருடம் 1ம் எதிரிக்கும் 6வது எதிரி சத்யாவுக்கும் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ள போதே முடித்துவிட்டார்கள். விவாகரத்து நடந்த விபவரங்கள் அனைத்தையும் மறைத்து உண்மைக்கு புறம்பாக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அது ஒருதலை பட்ச தீர்ப்பு என்பதால் நான் மேல்முறையீடு செய்துள்ளேன். ஆனால் ஒருதலை பட்ச தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஜவகர் நகரில் 1ம் எதிரியும் 6ம் எதிரியும் சேர்ந்து வாழ்ந்தபோது நான் போய் கேட்ட போது எதிரிகள் என்னை அடித்து தொந்தரவு செய்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பணம் பொருள் நிலம் ஆகியவை கூடுதலாக கேட்டார்கள் என்று நான் சொல்வது உண்மை என்றால் சரியல்ல. புகார் நான் சொல்ல சொல்ல காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது. நான் புகாரில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையில்லை என்றாலும் எனது நகைகள் அனைத்தும் 1வது எதிரியிடம் உள்ளது என்று சொல்வது உண்மையில்லை. அவ்வாறு இருந்தால் நான் விவாகரத்து வழக்கிலே சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை